**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 178 /2025, Mangalamedu P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அனாம் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | சையது ரசூல் | Occupation | : | எலக்ட்ரீசியன் |
| Village | : | வாலிகண்டபுரம் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 41/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 19.08.2025 | | | | | |

1 முதல் 6 எதிரிகள் ஆஜர்.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் 6 பேரையும் தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே பாதை பிரச்சனை இருந்து வருகிறது. 27.06.2020 ம் தேதி இரவு 7.45 மணியளவில் பாதை பிரச்சனை சம்பந்தமாக பேசுவதற்காக நான், எனது அண்ணன் சையது கலாம், சையது அகமது, சையது அமீர் , சையது கமால் பாஷா, மற்றும் உறவினர்கள், மற்றும் வாலிகண்டபுரத்தில் உள்ள ஆசார் பள்ளிவாசலில் இருந்தோம். எதிரிகள் தரப்பில் எதிரிகள் 6 பேரும் அவர்களுக்கு வேண்டியவர்களும் இருந்தார்கள்.

2. பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தபோது எதிரி சையது அப்துல் அஜிஸ் என்பவர் என் அண்ணன் சையது கலாம் என்பவரை கையால் தலையின் பின்னால் அடித்துவிட்டார். பிறகு மற்ற 5 எதிரிகளும் சேர்ந்து என் அண்ணனை அடித்ததில் என் அண்ணன் சையது காலமிற்கு உதட்டிலும் காதுகளிலும் காயம் ஏற்பட்டுவிட்டது. பிறகு எதிரிகள் 6 பேரும் கெட்ட வார்த்தைகள் சொல்லி திட்டினார்கள். பேச்சுவார்த்தைக்கு வரச்சொல்லிவிட்டு ஏன் அடிக்கிறீர்கள் என்று நான் கேட்டபோது என்னையும் எதிரிகள் 6 பேரும் கெட்ட வார்த்தைகள் சொல்லி திட்டி எதிரிகள் அக்ரம், மற்றும் அமானுல்லா ஆகிய இ ருவரும் என்னை அடித்து பள்ளிவாசல் கேட்டில் தள்ளவிட்டார்கள். அதில் எனக்கு நடுத்தலையில் காயம் ஏற்பட்டுவிட்டது.

3. காயம்அடைந்த நானும் என் அண்ணன் சையது கலாம் இருவரையும் சையது அகமது மற்றும் பாஷா ஆகியோர் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். சம்பவத்திற்கு

மறுநாள் 28.06.2020ம் தேதி பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு மங்களமேடு போலிசார் வந்து விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். புகாரை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். நான் அதை படித்துப்பார்த்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான்,. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. (**சாட்சியால் அளிக்கப்பட்ட புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விபரங்களை தான் நான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தபோது 28.06.2020 ம்தேதி விசாரித்தார்கள். நான் எத்தனை நாள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் என்றால் ஒரு நாள் இருந்தேன். மருத்துமனைக்கு எத்தனை மணிக்கு எந்த தேதியில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் 27.06.2020 ம் தேதி இரவு 9.00 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன்.

2. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். போலிசார் விசாரணையில் கூட்டத்தில் இருந்த சம்பவத்தில் ஈடுபடாத சித்திக் த/பெ. அப்பாஸ் அலி என்பவர் பெயரை சேர்த்து கொடுத்துவிட்டேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லும் ஜமாத் பள்ளி வாசலில் நான் பொறுப்பாளர் இல்லை என்றால் சரிதான். 1-வது எதிரி அப்துல் அஜிஸ் மேற்படி பள்ளிவாசலில் பொறுப்பாளராக இருந்தார் என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரித்தபோது பாதை சம்பந்தமாக பிரச்சனை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஏன் அடித்தார்கள் என்றுதான் கேட்டார்கள்.

3. என் அண்ணன்களும் சையது அகமதுவும் மேற்படி பள்ளிவாசலில் பொறுப்பாளர் இல்லை என்றால் சரிதான். பள்ளிவாசலில் ஒரு பிரச்சனை குறித்து பேசவேண்டும் என்றால் முன் கூட்டியே ஜமாத்தில் உள்ள முத்தவல்லியிடம் நேரிடையாகவோ, வாய்மொழியாகவோ, எழுத்துமூலமாகவோ கோரிக்கை வைத்தால் தான் ஜமாத்தை கூட்டுவார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் ஜமாத்தில் பாதை பிரச்சனை சம்பந்தமாகவோ, இடப்பிரச்சனை சம்பந்தமாகவோ பேசவேண்டும் என்று கோரிக்கை வைத்தேனா என்றால் இல்லை.

DMCOURT KUNNAM

4. ஆஜர் எதிரிகள் இடப்பிரச்சனை சம்பந்தமாக பேசவேண்டும் என்று ஜமாத்தை கூட்டினார்களா என்றால் அவர்கள் கூட்டினார்கள் என்று எனது அண்ணன் சொன்னார். எனது அண்ணார் ஜமாத்தில் எந்த பொறுப்பிலும் இல்லாத நிலையில் பிரச்சனை சம்பந்தமாக பேசவேண்டும் என்று என்னிடம் சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஜமாத்தில் நடைபெறும் அனைத்து விபரங்களும் சுமார் 20 வருடங்களாக எனக்கு தெரியுமா என்றால் எல்லாம் எனக்கு தெரியாது. எங்கள் ஊர் பள்ளிவாசலில் உள்ள முத்தவல்லிக்கும் முத்தவல்லி எதிர்ப்பாளர் அட்டாக் கமிட்டி தொடர்பாக ஏற்கனவே 30 வருடமாக வழக்கு உள்ளது என்றால், வழக்கு இருக்கிறது. ஆனால் 30 வருடமாக இல்லை.

5. வழக்கு யார் யார் பெயரில் போட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கின் தொடர்புடைய வழக்காக என் பெயரிலும் என் அண்ணன் பெயரிலும் , மற்றொரு அண்ணன் சையது அகமது பெயரிலும் மங்களமேடு காவல் நிலைய குற்ற எண். 1212/2020 என வழக்கு போட்டுள்ளார்களா என்றால் போட்டுள்ளார்கள். மேற்படி வழக்கில் இறுதி குற்ற அறிக்கை போலிசார் தாக்கல் செய்து அந்த வழக்கில் நாங்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜரானோம் என்றால் சரிதான். என் மீது இருந்த வழக்கில் நான் அபராதம் செலுத்தி முடித்து விட்டேன். மேற்படி வழக்கில் அபராதம் கட்டியதால் நான் குற்றத்தை ஒப்புக்கொண்டுதான் அபராதம் செலுத்தினேன் என்றால் சரிதான்.

6. நான் சொல்லும் வழக்கு S.T.C 16/2023 11.01.2023 ம்தேதியில் நான் எனது அண்ணன், மேற்படி அகமது பாஷா ஆகியோர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தி அதில் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் நான் வெளிநாடு செல்வதற்காக பி.சி.சி. அப்ளை செய்வதற்கு வழக்கறிஞரை கேட்டபோது கவுண்டர் பெட்டிசன் என் மீது போடப்பட்டுள்ளது என்றும் அதற்கு அபராதம் செலுத்திவிடலாம் என்று அன்றைக்கு அபராத தொகை செலுத்தினேன்.

7. நான் பாரா 6 ல் சொல்லியதுபோல் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதத்தை மனுவாக தாக்கல் செய்து அபராதம் செலுத்தினேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என் குடும்பத்திற்கும் எதிரிகள் 6 பேர் குடும்பத்திற்கும் எந்தவித முன்விரோதம் தனிப்பட்ட முறையில் இருந்ததா என்றால் இல்லை. ஆனால் பிரச்சனை பாதை சம்பந்மாக ஏற்பட்டது. மேற்படி பாதை சம்பந்தமாக எந்த சர்வே எண்ணில் எந்த பாதை எங்கு செல்கிறது என்று குறிப்பிட்டு எனது புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ, தற்போது அளித்த முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு

DMC UNNIKRISHNAN

சொல்லியுள்ளேனா என்றால் அந்த பாதையின் சர்வே எண். எனக்கு தெரியாது. ஆனால் நான் குழந்தையாக இருந்தபோது அது ஒரு பாதையாக இருந்தது.

8. மேற்படி பாதை சம்பந்தமாக பாதையை ஆக்கிரமிப்பு செய்கிறார்கள் என்று நான் பொதுநல வழக்கோ, நிலுவையில் உள்ளதா என்றால் நிலுவையில் உள்ளது வழக்கு எண். என் அண்ணனுக்கு தான் தெரியும். சம்பவ இடம் என்பது ஜமாத்திற்கு வெளியே உள்ளது என்றால் இல்லை. ஜமாத்திற்கு உள்ளே உள்ளது. சம்பவம் நடந்த அன்று ஜமாத்திற்குள் சமார் 400,500 பேர் இருந்திருப்பார்களா என்றால் சுமார் 40,50 பேர் இருந்திருப்பார்கள். இந்த வழக்கில் சாட்சியாக பொது நபர்களை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் போலிசார் 5 நபர்களை அழைத்து வர சொன்னார்கள் அதில் அமீர், கமால் பாஷா, பொதுவான நபர்களாவார்கள்.

9. கமால் பாஷா என்பவர் தற்போது முத்தவல்லியாக இருக்கிறார். அவர் எனது அண்ணார் சித்தப்பா இல்லை. 1–வது எதிரியும் 2–வது எதிரியும் தந்தை மகன், 3–வது எதிரியும் 6–வது எதிரியும் மகன் தந்தை என்றும் 1–வது எதிரியின் மைத்துனர் மகன் 5–வது எதிரி என்றும் 4–வது எதிரி 1–வது எதிரியின் மகன் என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் அனைவரும் ஒருசேர பள்ளிவாசலுக்கு தொழுகைக்கு வரமாட்டார்கள் என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் தனித்தனியே பிசினஸ் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். 6–வது எதிரி அப்பாஸ்அலி வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்க கூடாது என தற்போது முத்தவல்லியான எங்கள்தரப்பு வழக்கு தமிழ்நாடு வக்பு போர்டில் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. வக்பு போர்டடில் இருந்து போர்டின் வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து மேற்படி ஆணையர் மேற்படி பாதையை வந்து பார்வையிட்டு ஊரை அளந்து பாதை இல்லை அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் தாக்கல் செய்துள்ளார்கள்.

10. அப்பாஸ் அலி வீடு கட்டுவதற்கு முன்பாக அவர் வீடு கட்டியுள்ள இடம் பாதை என்று வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் ஜமாத்தில் இருபிரிவாக இருந்து முத்தவல்லி தொடர்பாக பிரச்சனை உள்ளது என்றால் 3 பிரிவாக உள்ளது. தற்போது முத்தவல்லி தொடர்பாக 1–வது எதிரி முத்தவல்லி சரியாக செயல்படவில்லை என்று புகார் கொடுத்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரி 1 சம்பவத்தன்று தொழுகைக்கு வரும்போது நாங்கள் தொழுதுவிட்டு பள்ளிவாசலுக்கு வெளியே வரும்போது எப்படிடா முத்தவல்லி சம்பந்தமாக புகார் கொடுப்ப என்று நாங்கள் தான் 1–வது எதிரியை தாக்கினோம் என்றால் சரியல்ல. 1–வது எதிரி நாங்கள் தாக்கியதை தற்காத்துக்கொள்ள தடுத்து கையை உதறி

தள்ளியதில் நான் பள்ளிவாசல் கேட்டில் மோதிக்கொண்டேன் என்றால் சரியல்ல.

11. ஜமாத் , பாதை பிரச்சனை உண்டு என்றால் அதனை உரிமையியல் நீதிமன்றத்தல் தீர்த்துக்கொள்ளலாம், 1–வது எதிரியை தகராறு செய்யும் நோக்கத்தோடு ஒன்று கூடி தாக்கினோம் என்றால் சரியல்ல. 1–வது எதிரியை தவிர மற்ற எதிரிகள் யாரும் சம்பவத்தில் வரவில்லை என்றால் சரியல்ல. நான் தான் 1–வது எதிரியை தாக்கினேன் என்றாலும் அதைபொறுத்து 1–வது எதிரி கொடுத்த புகாரின்பேரில் நாங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதத்தை செலுத்தினோம் என்றால் சரியல்ல. இந்த எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியதால் எதிரிகளை பழிவாங்க அவர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JUM COURT, KUNNAM